ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ்
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA

ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-2, சூன் 2020

# வசந்தன் கூத்தும் நாட்டார் கலையும்

**பொன். சுரேந்திரன்**

உதவிப் போதனாசிரியர், கிழக்கு பல்கலைக்கழகம்
இலங்கை

பாரம்பரிய கலைகள் சமூகஅழகியல் தன்மையுடையதாகவும், சமூக இயங்கியலுக்கான பல்வேறு கூறுகளைக் தன்னகத்தே கொண்டுள்ளவையாகவும் காணப்படுகின்றன. இவ்வாறான நாட்டார் கலைவடிவங்கள் சமூக ஒருமைப்பாட்டையும் சமூகங்களிடையே மகிழ்வையும் ஆரோக்கியமான உறவு நிலைகளையும் தோற்றுவிக்கின்றது. பொதுவாகவே கலைவடிவங்கள் பொழுதுபோக்கிற்காகவும் மகிழ்விற்காகவும் ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக கழிப்பதற்காகவும்; கேளிக்கைக்காகவும் என்று மட்டுமே பார்க்கப்படுகின்றன. ஆனால் அதனை உள்ளார்ந்து பார்ப்பதில்லை. அந்தவகையில் ஈழத்தில் நாட்டார் கலைகளில் வசந்தன் கூத்திற்கு தனிச்சிறப்பு இருப்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

வசந்தன் கூத்து என்பது கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும் தெய்வ பக்தியுடன் நேர்த்திக் கடன்களை செய்வதற்காகவும் நிகழ்த்தப் பெறுகின்றது. வசந்தன் கூத்திற்கு நீண்ட வரலாற்று பாரம்பரியம் ஒன்று இருப்பதனைக் காணலாம். எளிமையான பாடல்களையும் நுட்பமான ஆடல்களையும் கொண்டதாகவே காணப்படுவதுடன் சமயம் சார்பாகவும் கேளிக்கைப் பண்புடையதாகவும் மக்கள் வாழ்வியலோடு நிலைத்து நிற்பதும் முழுக்கமுழுக்க விவசாயக் கிராமங்களை மையமாக வைத்து நிகழ்த்தப்படுவதும் சிறப்பம்சமாகும். வசந்தன் என்பதற்குப் பல வரைவிலக்கணங்கள் கொடுக்கின்றார்கள்.



அதாவது இந்த நடனம் வசந்தகாலமாகிய சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் ஆடுவதனால் இதனை வசந்தன் என பெயரிட்டு அழைத்திருக்கலாம் என்றும் சிறுபிள்ளைகளை வசந்தன் பிள்ளைகள் எனவும், அவ்வாறானவர்கள் ஆடியதால் வசந்தன் கூத்து என்றும், வசந்த மகாராசனின் மனைவியை மகிழ்விப்பதற்காக ஆடியதால் வசந்தன் கூத்து என்றும், கண்ணகியின் கோபம் தணிக்க வசந்தன் பிள்ளைகள் கோல் கொண்டு ஆடியதால் வசந்தன் என்றும் பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. மேலும் வசந்தன் என்ற சொல்லினை இன்பம் என்ற பொருளிலும் அழைப்பதுண்டு. இவ்வாறு நோக்கும் போது உழவர் தம் அறுவடை முடிந்த பின்னர் இன்ப நோக்கிற்காக ஆடும் இன்பக் கூத்தே வசந்தன் கூத்தாயிற்று என்றும் எடுத்துக் கொள்ளமுடியும்.

வசந்தன் கூத்தினைப் பெரிதும் ஆண்களே ஆடி வருகின்றார்கள் தோற்றத்திலும் ஆற்றலிலும் வயதிலும் ஒத்தசிறுவர்களே அதிகமாக ஆடுகின்றார்கள். இவர்கள் சோடி சோடியாக ஆறு பேர் எட்டு பேர் பன்னிரெண்டு பேர் பதினாறு என்ற எண்ணிக்கையில் ஆட முடியும். இவர்கள் இரு கைகளிலும் ஒரு முழு நீளமும் முக்கால் அங்குலம் உடைய இரு தடிகளைவைத்திருப்பர். பாடல் ஓசைக்கும் மத்தள ஓசையின் தாளத்திற்கும் அமையும் தடிகளால் தட்டி ஆட்ட முறைகள் மாற்றி மாற்றி ஆடுவதன்; மூலம் கண்ணுக்கும் காதுக்கும் இனிய விருந்தாக அமையும். ஆடுவோருக்கு நடுவே மத்தளம் அடிக்கும் அண்ணாவியாரும் பாட்டுக்கொப்பியுடன் பாடுபவரும் சல்லாரி அடித்துத் தாழம் போடுபவரும் நிற்பார்;கள். பாடலுக்கும் மத்தள தாளத்திற்கும் காலெடுத்து மிதித்து மேலும் கீழும் பக்கத்திலும் சரிந்தும் வளைந்தும் துள்ளியும் குதித்தும் பாய்ந்தும் அபிநயம் புரிந்து ஆடுவார்கள்.

இக்கூத்தின் ஆடை அலங்காரம் முக்கியம் பெறுகின்றது. இவர்களது ஆட்டகோலங்கள் கடினமானது என்பதினால் ஆட்டத்திற்கு இலகுவான முறையில் வேட்டியும் தார்ப்பாச்சியும் தலையில் தலைப்பாகையும் கழுத்தில் மாலையும் நெற்றியில் விபூதிக் குறியும் தோளில் பூணூலும் கால்களை தூக்கி



ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-2, சூன் 2020

ஆடும் வகையில் சதங்கையும் அணிந்திருப்பார்கள். இவை சில இடங்களில் சிறுசிறு மாறுதல்கள் இருக்கும். எவ்வாறாயினும் வசந்தன் கூத்தின் ஆடைகள் கவர்ச்சியான அழகுடையதாக அமைந்திருக்கும்.

கிராமத்து மக்கள் தமது நாளாந்த வாழ்க்கை நெறியில் நாட்டார் கலைகளை வடிவமைத்தனர் இதன் காரணமாகவே வசந்தன் கூத்தினையும் பல்வேறு ஆட்டமுறைக்கு ஏற்ப வகைப்படுத்தினார்கள்.

- வசந்தராசன் கொலு
- வழிபாட்டுடன் தொடர்புடைய வசந்தன் கூத்துக்கள்
- வரலாறு சார்ந்த வசந்தன் கூத்துக்கள்
- தொழில்முறை சார்ந்த வசந்தன் கூத்துக்கள்
- நகைச்சுவை சார்ந்த வசந்தன் கூத்துக்கள்
- கதை கூறும் வசந்தன் கூத்துக்கள்
- விளையாட்டு சார்ந்த வசந்தன் கூத்துக்கள்

இவ்வாறு வகைப்படுத்தப்பட்டாலும் ஆரம்ப ஆட்டமுறைகள் ஒன்றாகவே அமையும். வசந்தன் கூத்துக்கள் முதலில் பிள்ளையார் சுழியில் ஆரம்பமாகும்.

*“முந்தி முந்தி உனைத் தொழுவேன்
முருகன் சகோதரனே
முத்தளந்தோர் திருமுருகா
மூசிக வாகனனே……..”*



பிள்ளையார் துதி எக்கருமங்களையும் தொடங்கும் போதும் சிறப்பாக அமையும் என்பது கிராமிய மக்கள் வழக்கமாகும்.

வசந்தன் கூத்திலே தொழில் முறைசார்ந்த வேலைகளை செய்பவர்கள். வயல் நிலங்களை தெரிவுசெய்வது தொடக்கம் அதனை துப்பரவு செய்து வேளாண்மை செய்வதற்குத் தயாராவார்கள் அந்த நிலத்தில் நெற்களை விதைத்தும் அதன் பின் வேளாண்மையைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்பு வேலிகள் போடப்படுவதும் நெற்கதிர்களை வெட்டுவதற்கு அரிவாளைத் தயார் செய்து அறுவடை மேற்கொள்வதும் வெட்டப்பட்ட கதிர்களைச் சேர்த்து சூடடித்து நெற்களைக் கொண்டு செல்வதற்கும் வசந்தன் பாடல்களைப் பாடி அபிநயம் செய்து ஆடுவார்கள். விவசாய வசந்தனுக்கு பின்வரும் பாடலைச் சான்றாகக் கூறலாம்.

*“சூட்டைத் தள்ளடா மாட்டை ஏத்தடா
சோம்பல்தனத்தைத் உடையடா
பாட்டைப் பாடடா மாட்டைச் சாயடா
பள்ளராவைர் அனைவரும்…..”*

இப்பாடல் சூடுபோடும் வசந்தனில் வரும் பாடலாகும். இவ்வாறு தொடக்கம் முதல் இறுதி வரை பாடல்கள் அவர்களின் செயல்கள் குறிப்பிடப்படும்.

வேளாண்மை வசந்தனைப் போன்றுதான் நகைச்சுவை வசந்தனும் சிறப்புடையது. வசந்தன் கூத்தினை பார்க்க வருபவர்களை மகிழ்ச்சியில் அனுப்பும் நோக்கமும் வடிவமைக்கப்பட்டுள்ளது இவற்றுள் முசுற்று வசந்தன், செல்லப்பிள்ளை வசந்தன் என்பன முக்கியமானது. முசுற்று வசந்தனில் தன் துணைவியுடன் சோலைக்குப் போய் கனி மரங்களில் கனி பறித்து உண்ண ஏறிய ஒருவனை முயற்று எறும்புகள் சூழ்ந்து கடிக்க அதனால் அவன் பட்ட வேதனையை நகைச்சுவையாகக் கூறுவதாக அமைந்துள்ளது.

*“பற்றியெழுந்திடும் பசியால் - நானும்
பாகலிலேறிப் பழம் கொய்யப் போனேன்
தொற்றியே வருகுது முயிறு-என்
துடையைத் தடையடி தோகை நல்லாரே…..”*

ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-2, சூன் 2020

இவ்வாறு ஒவ்வொரு வசந்தன் கூத்திலும் தனித்துவமான தன்மையினைக் காண்பதோடு அவை மக்களின் மனம் நிறைந்த கலை வடிவமாகவும் விளங்குவதைக் காண முடிகின்றது.

## VASANTHAN KOOTHUM NATTAR KALAIYUM

**Pon. Surendran**

Traditional arts are seen as socio-aesthetic embodying various elements of social dialectics. Such folk art forms create social cohesion and happiness and healthy relationships among communities. In general, art forms are used for entertainment, pleasure and leisure time and viewed only for fun and not introspection. Accordingly, Vasanthan Koothu is unique in folk art in Eelam.

The dance might have been called Vasanthan because it was played in the spring months of Chithirai, Vaikasi and Aani months. It is also to say that the dance was performed by little children who were considered Vasanthan's children and hence came to be called as Vasanthan dance. The art form got its name from the dance performance of the children of Vasanthan who tried to alleviate Kannaki's anger. Besides the word Vasanthan also means pleasure with which the farmers danced after harvest and therefore it began to be termed as Vasanthan dance.